(இ) திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சியர்களுக்கு, நிலுவையிலுள்ள கோப்புகளை விரைவில் முடிவு செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். திடீர் சோதனைக்குச் செல்லும்போது இது சம்பந்தப்பட்ட கோப்புகளையும் பரிசீலிக்குமாறு கோட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி எண்கள் 95, 96 ஒத்திவைக்கப்படுகின்றன.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவரவர்களே, இது மாதிரிப் போடக் கூடிய மனுக்களை விரைவில் முடிப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? குறிப்பாக, 1971 ஆம் ஆண்டிலே போடப்பட்ட மனுக்கள் 11, 1972-ம் ஆண்டிலே 4, 1973 ஆம் ஆண்டிலே 3, 1974 ஆம் ஆண்டிலே 14 ஆகிய இந்த மனுக்களெல்லாம் கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன, அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதற்கு மூலக் கேள்வியிலேயே பதில் சொன்னேன். 1970 இலே 50 மனுக்களில் 4 மனுக்கள் தான் நிலுவையில் உள்ளன.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த நிலை திருநெல்வேலி மாவட்டத்தில் மாத்திரமல்ல. எல்லா மாவட்டங்களிலும் இவைகள் நடந்து கொண்டு வருகின்றன. இப்படி வறட்சி ஏற்பட்டவுடனே நிலச் சொந்தக்காரர்களுக்கு நில வரி, மற்ற வரிகளெல்லாம் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறதே, கடனையெல்லாம் ஒத்தி வைக்கிறோமே, சாகுபடி செய்யக் கூடிய குத்தகையையும் வறட்சி காரணமாகத் தள்ளுபடி செய்யக் கூடிய நடவடிக்கைகள் எடுத்தால் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, வறட்சியின் காரணமாக விளையாவிட்டால் வாரம் கொடுக்கவேண்டியதில்லை என்று சட்டத்தில் இருக்கிறது.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்

*98. வினு—**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1975 அக்டோபர் 28]

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக நிலச் சொந்தக்காரர்களுக்கு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தக் கேள்வி முடிந்து, அடுத்த கேள்வி 98-ம் கேட்கப்பட்டு, பதில் சொல்லியாகி விட்டது.

ஒகேனக்கல் நீர்மின் திட்டம்

*99. **வினா—திரு. என். மாணிக்கம்:**
திரு. என். கே. பழனிசாமி:
திரு. ரா. ரா. முனுசாமி:
திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கலில் புதிய நீர் மின் நிலையம் ஏற்படுத்துவது சம்பந்தமாக கர்நாடக அரசின் சார்பிலும் தமிழ்நாடு அரசின் சார்பிலும் பேச்சு வார்த்தை நடைபெற்றதா?

(இ) ஆம் எனில் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) தமிழகப் பொதுப் பணித் துறை அமைச்சருக்கும் கர்நாடக பொதுப்பணி மின்சக்தி அமைச்சருக்கும் இடையே 5—6—1974 அன்று அமைச்சர்கள் நிலையில் ஹொகேனக்கலில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது சில முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆற்றின் பல்வேறு பகுதிகளிலிருந்து மின் சக்தி உற்பத்தி செய்வதற்கான தகுந்த செயற் குறிப்புகளை இரு மாநிலங்களும் வகுக்க வேண்டும். அந்தந்த வட்டாரத்தின் நலனை நிறைவு செய்யும் வகையில் மிகவும் ஆதாயம் தரத்தக்க,